www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# Kanchipuram Dt

## இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

## கணக்குப்பதிவியல்

நேரம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

பகுதி - அ

10 x 1 = 10

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நிறுமக் கலைப்பின்போது மட்டுமே அழைக்கப்படக்கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி இவ்வாறு அழைக்கப்படும்.
   அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆ) அழைக்கப்பட்ட முதல்
   இ) முதலினக் காப்பு ஈ) காப்பு முதல்
2. சுப்ரீம் நிறுமம் பங்கொன்று ₹10 மதிப்புடைய 100 பங்குகளை இறுதி அழைப்புத்தொகை ₹2 செலுத்தாததால் ஒறுப்பிழப்பு செய்தது. அவை அனைத்தும் பங்கொன்று ₹9 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன. முதலினக் காப்புக்கு மாற்றப்பட வேண்டிய தொகை
   அ) ₹700 ஆ) ₹800 இ) ₹900 ஈ) ₹1000
3. சொத்துகளை வாங்கி பங்குகள் வெளியிடும்போது வரவு வைக்கப்படும் கணக்கு
   அ) விற்பனையாளர் கணக்கு ஆ) பற்பல சொத்துகள் கணக்கு
   இ) பங்கு முதல் கணக்கு ஈ) வங்கி கணக்கு
4. ஒறுப்பிழப்பு செய்யும்போது பங்கு முதல் கணக்கு எதில் பற்று வைக்கப்படுகிறது?
   அ) முகமதிப்பு ஆ) பெயரளவு மதிப்பு
   இ) செலுத்தப்பட்ட தொகை ஈ) அழைக்கப்பட்ட தொகை
5. பங்கு முதலினை தவணை முறையில் பெறும்போது ______ விண்ணப்பத் தொகை என்று அழைக்கப்படும்.
   அ) முதல் தவணை ஆ) இரண்டாம் தவணை
   இ) மூன்றாம் தவணை ஈ) நான்காம் தவணை
6. ஒரு வணிகத்தின் முதலாம் ஆண்டுச் செலவுகள் ₹80,000 இரண்டாம் ஆண்டில் செலவுகள் ₹88,000 ஆக அதிகரித்திருந்தது. இரண்டாம் ஆண்டின் போக்கு விகிதம் என்ன?
   அ) 10% ஆ) 110% இ) 90% ஈ) 11%
7. ஒரு பொது அளவு இருப்புநிலைக்குறிப்பில் நீண்டகாலச் சொத்துகளின் சதவீதம் 75 எனில் நடப்புச் சொத்துகளின் சதவீதம் எவ்வளவு?
   அ) 175 ஆ) 125 இ) 25 ஈ) 100
8. நிதிநிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது
   அ) பணம்சாரா தகவல்கள் ஆ) கடந்த கால தகவல்கள்
   இ) குறுகிய கால தகவல்கள் ஈ) நீண்டகால தகவல்கள்
9. நிதி என்னும் சொல் குறிப்பிடுவது
   அ) நடப்புப் பொறுப்புகள் ஆ) நடைமுறை முதல்
   இ) நிலைச் சொத்துகள் ஈ) நீண்டகாலச் சொத்துகள்
10. இருப்புநிலைக் குறிப்பு வணிக நிறுவனத்தின் நிதிநிலை பற்றிய ______ தகவல்களை வழங்குகிறது.
    அ) ஒரு காலகட்டத்திற்கு மேலான ஆ) ஒரு குறிப்பிட்ட நாளுக்குரிய
    இ) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான ஈ) குறிப்பிட்ட கணக்காண்டிற்குரிய

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பகுதி - ஆ

II. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 17 கட்டாய வினா) 5 x 2 = 10

11. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளைப் பட்டியலிடவும்.
12. சிறுகுறிப்பு வரைக - காப்பு முதல்.
13. பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?
14. குறிப்பேட்டுப் பதிவை நிறைவு செய்யவும்.

| நாள் | விவரம் | பே.ப. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| 1. | ...................... ப<br>பங்கு விண்ணப்பக் க/கு<br>(ஒன்று ₹2 வீதம் விண்ணப்பத் தொகை பெற்றது) | | 2,00,000 | ............ |

15. பங்குகள் ரொக்கத்திற்காக முகமதிப்பில் வெளியிடும்போது ஒதுக்கீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.
16. பின்வரும் விவரங்களிலிருந்து மேரி வரையறு நிறுமத்தின் ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்.

| விவரம் | 2015-16 ₹ | 2016-17 ₹ |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 4,00,000 | 5,00,000 |
| இயக்கச் செலவுகள் | 2,00,000 | 1,80,000 |
| வருமான வரி (வரிக்கு முன் இலாபத்தில் %) | 20 | 50 |

17. ராதா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பொது அளவு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்.

| விவரம் | 2016-17 ₹ |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 4,50,000 |
| இதர வருமானம் | 67,500 |
| செலவுகள் | 1,35,000 |

பகுதி - இ

III. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 24 கட்டாய வினா) 5 x 3 = 15

18. நிதிநிலை அறிக்கையின் குறைபாடுகள் ஏதேனும் மூன்றினை விளக்கவும்.
19. ரொக்க ஓட்ட பகுப்பாய்வு குறித்து சிறுகுறிப்பு வரையவும்.
20. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளின் மறுவெளியீடு என்றால் என்ன?
21. சிறுகுறிப்பு வரைக - அங்கீகரிக்கப்பட்ட முதல்
22. வானவில் மின்பொருள் வரையறு நிறுமம் ₹10 மதிப்பில் வெளியிட்ட 1000 நேர்மைப் பங்குகளை அர்ஜுன் தம்வசம் வைத்திருந்தார். அவர் விண்ணப்பத்தின் மீது ₹3, ஒதுக்கீட்டின் போது ₹4 செலுத்தி விட்டார். ஆனால், முதல் மற்றும் இறுதி அழைப்பின் மீதான ₹3 அவரால் செலுத்த முடியவில்லை. அழைப்பு தொகை செலுத்தாத காரணத்தினால் இயக்குனர்கள் அப்பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தனர். ஒறுபிழப்பிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



23. சாரா நிறுமம் பங்கொன்று ₹10 வீதம் 10,000 நேர்மைப் பங்குகளை விண்ணப்பத்தின் போது முழு தொகையும் செலுத்தும் வகையில் வெளியிட்டது. கீழ்க்கண்ட நிலைகளில் குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.
   i) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்
   ii) பங்கொன்று ₹2 முனைமத்தில் வெளியிட்டால்

24. மரியா வரையறு நிறுமத்தின் 2018, மார்ச் 31ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்யவும்.

| *விவரம்* | *31st மார்ச் 2018 ₹* |
|---|---|
| **I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | |
| பங்குதாரர் நிதி | 4,00,000 |
| நீண்டகாலப் பொறுப்புகள் | 3,20,000 |
| நடப்புப் பொறுப்புகள் | 80,000 |
| **மொத்தம்** | **8,00,000** |
| **II. சொத்துகள்** | |
| நிலைச் சொத்துகள் | 6,00,000 |
| நடப்புச் சொத்துகள் | 2,00,000 |
| **மொத்தம்** | **8,00,000** |

பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 x 5 = 15

25. அ) முன்னுரிமைப் பங்குகளுக்கும், நேர்மை பங்குகளுக்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறவும்.

*(அல்லது)*

ஆ) ஒப்பீட்டு அறிக்கை தயாரிப்பில் உள்ள படிநிலைகளை விளக்கவும்.

26. அ) சர்மிளா வரையறு நிறுமம் மற்றும் சங்கீதா வரையறு நிறுமத்தின் 2019, மார்ச் 31ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்யவும்.

| *விவரம்* | *சர்மிளா நிறுமம் ₹* | *சங்கீதா நிறுமம் ₹* |
|---|---|---|
| **I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | |
| பங்குதாரர் நிதி | 5,00,000 | 11,00,000 |
| நீண்டகாலப் பொறுப்புகள் | 4,00,000 | 7,00,000 |
| நடப்புப் பொறுப்புகள் | 1,00,000 | 2,00,000 |
| **மொத்தம்** | **10,00,000** | **20,00,000** |
| **II. சொத்துகள்** | | |
| நிலைச் சொத்துகள் | 6,50,000 | 18,00,000 |
| நடப்புச் சொத்துகள் | 3,50,000 | 2,00,000 |
| **மொத்தம்** | **10,00,000** | **20,00,000** |

*(அல்லது)*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



ஆ) கௌதம் வரையறு நிறுமம், இராகவ் அவர்களின் ₹10 மதிப்பிலான 500 நேர்மைப் பங்குகளின் இறுதி அழைப்பு ₹2 செலுத்தாத காரணத்தினால் ஒறுப்பிழப்பு செய்தது. ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள், மதன் என்பவருக்கு பங்கு ஒன்று ₹8 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டது. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

27. அ) தாய் நிறுமம் ₹10 மதிப்புள்ள 1,00,000 நேர்மைப் பங்குகளை வெளியீடு செய்தது.

| | |
|---|---|
| விண்ணப்பத்தின் போது | ₹5 |
| ஒதுக்கீட்டின் போது | ₹2 |
| முதல் அழைப்பின் போது | ₹2 |
| இறுதி அழைப்பின் போது | ₹1 |

செலுத்த வேண்டும். அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டு தொகை பெறப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

*(அல்லது)*

ஆ) பரணி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து, ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்கவும்.

| *விவரம்* | *2016-17* ₹ | *2017-18* ₹ |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 30,000 | 45,000 |
| இதர வருமானம் | 4,000 | 6,000 |
| செலவுகள் | 10,000 | 15,000 |
| வருமான வரி | 30% | 30% |

*******

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com